
ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுர முரளி



ஸ்ரீ குருஜியின் ஜயந்தி சிறப்பிதழ்

வேணு : 1 நவம்பர் 1995 கானம் : 4

ஸ்ரீ ஹரி :

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்
# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 1 நவம்பர் 1995 கானம் : 4

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | ஸ்ரீ குருஜியைப் பற்றிய கீர்த்தனம் | 4 |
| 3. | ஸ்ரீ குருஜியுடன் எங்களது அனுபவங்கள் | 5 |
| 4. | ஸ்ரீ குருஜி - 3 | 9 |
| 5. | யுக தர்ம ஸ்தாபகர்கள் - 4 | 14 |
| 6. | பிரார்த்தனை | 19 |
| 7. | ஸத்குரு | 23 |
| 8. | ஸ்ரீ குருஜியின் பிறந்த நாள் செய்தி | 25 |
| 9. | செய்திகள் | 31 |



ஆந்திர தேசத்திலிருந்து வந்திருந்த வேத பண்டிதர்களின் வேத பாராயணத்தை
ஸ்ரீ குருஜி ச்ரவணம் செய்யும் காட்சி

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

(ராகம் - நாட்டை) (தாளம் - ஆதி)

(பல்லவி)

ஸ்ரீமத் பாகவதம் ஸ்வயம் ஹரிரேவ

(அனு பல்லவி)

ஸகல புராண மத்யே ஸ்வயம் ப்ரகாசிதம்
தீனோத் தாரண திவ்ய சரித்ரம் (ஸ்ரீமத்)

(சரணம்)

1. வ்யாஸாசர்ர்யேன விரசிதம்
பாவுக ரஸிக மண்டல ஸேவிதம்
ஞான வைராக்ய பக்தி தாயகம்
ப்ரஸ்த்தான சதுர்த்தம் ப்ரம்ம வித்யாம் போஷிதம்

(மத்யம காலம்)

ஸம்ஸாரிணாம் கருணயா சுகமுனி வர்ஷிதம்
ஸர்வ மகாத்மனாம் சித்த ஆகர்ஷிதம்
ப்ரம்ம ஹத்யாதி ஸகல பாப விநாசிதம்
ஆத்ம தேவ சரித்ரேண அதி ப்ரஸித்தம் (ஸ்ரீமத்)

2. ப்ரதிபதம் நாம மஹிமா ப்ரபாவம்
ப்ரதி ச்லோகம் ஸாதுஜன மாஹாத்ம்யம்
ப்ரதி ஸ்கந்தம் பக்த வாத்ஸல்ய நிரூபணம்
பாகவத முரளீதர பக்தைஹிம் நித்ய ஸேவிதம் (ஸ்ரீமத்)

# ஸ்ரீ குருஜியைப் பற்றிய கீர்த்தனம்

*ராகம் : பிலஹரி* *தாளம் : ஆதி*

*(பல்லவி)*

முரளீதர மாம் பாலய நித்யம்
வாரய மேதுக்கம் மோதயமாம் ஸத்குரோ

*(அனுபல்லவி)*

கிம் ந ச்ருணோஸி மம ரோதன ராவம்
மார்ஜார வ்ருத்திர்ஹி மயி சிசௌ ஸாம்ப்ரதம்

*(சரணம்)*

ஸர்வக்ஞ வ்யாபக ஸர்வ ஶக்தே நித்யம்
நித்யத்ருப்த ஶுத்த ஞப்தி ரூப
ஸ்ரீ பக்த ஹிதகர பூயான்மே ஜீவிதம்
த்வத் பாதுகா ஸ்மரண பஜனாதி தன்யம்

**- அக்னிஹோத்ரி ஸோமயாஜி**
**ஸ்ரீ மல்லிஹார்ஜுன சர்மா**

**அட்டைப்பட விளக்கம்**

மஹாராஷ்டிரா தேசத்திலுள்ள பண்டரீபுர க்ஷேத்ரத்தில், சந்திரபாஹா நதியின் அக்கரையில் உள்ள ஓர் ஆஸ்ரமத்தின் வாயிலில் ஸ்ரீ குருஜி தியானம் செய்யும் காட்சி.

# ஸ்ரீ குருஜியுடன் எங்களது அனுபவங்கள்

ஸ்ரீ குருஜியினிடத்தில் எங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை எழுத்தால் கொண்டு வருவது மிகவும் கடினமான காரியம். அதுவும் அந்தரங்கமாக ஏற்பட்ட அனுபவங்கள் விவரிக்க இயலாது. அந்த அனுபவத்திற்காகவும், எங்களது ஆன்மாவை உயர்த்துவதற்காகவும் கிடைத்த சாட்சாத் பாண்டுரங்கன்தான் எங்கள் குருஜி. எங்கள் பேச்சு, மூச்சு, உயிர் அனைத்திலும் நிறைந்திருக்கும் தெய்வம்தான் எங்கள் குருஜி.

முதன் முதலில் குருஜியைச் சந்தித்ததே தெய்வ சங்கல்பம்தான். நான் பல ஆண்டு காலமாக பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு வருகிறேன். அதுவும் திருச்செந்தூர் முருகனிடத்தில் மிக அபரிமிதமான பக்தி, எனது வாழ்வு இந்நிலைக்கு உயர்ந்ததே அவனது அனுக்ரகம்தான். இருப்பினும் குருவை அண்டி பக்தி பண்ணுவதுதான் மிகவும் நல்லது என பிறர் சொல்லியும் புத்தக வாயிலாகவும் தெரிந்து கொண்டேன். அப்படி ஒரு நல்ல குருவை முருகனேதான் காண்பிக்க வேண்டும். ''குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'' என அனு தினமும் கேட்டு வந்தேன். இந்த நிலையில் சென்னைக்கு மாற்றலாகி வந்துவிட்டேன் புதிய இடத்தில் என்னுடன் வேலை பார்க்கும் நண்பர் மூலம் குருஜியைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.

இருந்தாலும் கிட்டத்தட்ட ஓராண்டு காலம்வரை குருஜியை சந்திக்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. அப்படி பாக்கியம் கிடைத்ததும் ஒரு வியாழக்கிழமையில்தான். குருவுக்கு உகந்த நாள். முதன் முதலில் குருஜியைப் பார்த்ததும் மனதுக்கு மிக்வும் இதமாக இருந்தது. முதல் முறை பார்க்கும் பொழுதே குருஜி ஜப மாலை கொடுத்து அனுக்கிரஹித்தார்கள்

எனக்கு உண்மையிலேயே உடல், மனம் எல்லாம் புல்லரித்தது. எனது மனக்கண் ஒரு முறை திருச்செந்தூர் முருகனை முழுமையாகப் பார்த்தது. முருகன் தனது கையிலுள்ள ஜப மாலையையே கொடுத்தது போன்ற உணர்வுதான் மேலோங்கி நின்றது.

ஸ்ரீ குருஜியின் கிருபையினால், எங்களுக்கு ஏற்பட்ட சில அனுபவங்களைச் சொல்கிறேன்.

நாங்கள் பல வருடங்களாக சென்னையிலிருந்தாலும் ஒவ்வொரு முறையும் காஞ்சி பரமாச்சார்யாளை சென்று தரிசிக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. இருப்பினும் அந்த பாக்கியம் பல முறை முயன்றும் கிடைக்க வில்லை. குருஜியை சந்தித்தப்பின்தான் அந்த பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது. அதுவும் சற்று ஆச்சரியகரமாகவே நிறைவேறிற்று. ஒரு வியாழக்கிழமை காலை நானும் எனது குடும்பத்தினரும் காஞ்சி செல்லத் தயாரானோம். முதல் நாளே மட்டைத் தேங்காய் எல்லாம் வாங்கி வைத்திருந்தோம். எப்போதும் நான் எங்கு சென்றாலும் சுவாமியிடம் சொல்லிவிட்டுத்தான் வெளியே கிளம்புவேன். அன்று காலை குருஜி படம் முன் நின்று காஞ்சி மகா சுவாமி தரிசனம் நன்கு கிடைக்க வேண்டும் என வேண்டிக்கொண்டேன். நான் வேண்டிக் கொண்ட 10 நிமிடங்களில் குருஜியே எங்கள் இல்லம் வந்து விட்டார்கள். எங்களது ஆனந்தத்திற்கு அளவே இல்லை. காஞ்சிப் பெரியவருக்கு வாங்கிய மட்டைத் தேங்காயை குருஜிக்கு காணிக்கையாக்கி நமஸ்காரம் செய்தோம். பின் சற்று நேரத்தில் குருஜி சென்றவுடன் எங்கள் பக்கத்து வீட்டிலிருந்து நான்கு மட்டைத் தேங்காய் வந்தன. இதுவரை அவர்கள் எங்களுக்கு இம்மாதிரியான சாமான்கள் கொடுத்ததே இல்லை. இருந்தாலும் குருஜிக்கு ஒன்றாகக் கொடுத்தது, சில நிமிடத்தில் நான்காக மாறியது. பின் அதை எடுத்துச் சென்று மகாப்பெரியவாளை சென்று தரிசித்து வந்தோம்.

எனது மனைவிக்கு பல நாட்களாக முதுகில் வலி இருந்தது. அதை என்ன என்று டாக்டரிடம் காண்பித்துக் காட்டி வந்தோம். டாக்டர் உடனே Scan எடுத்துப் பார்த்துவிட்டு கர்ப்பப் பையில் வெளியில் சிறிய கட்டி இருக்கிறது. ஆகவே கர்ப்பப் பையை எடுக்க வேண்டும் எனக் கூறி ஆபரேஷனுக்கு நாளும் குறித்து விட்டார்கள். நாங்களும் சமாதானம் பண்ணிக் கொண்டு ஆபரேஷன் பண்ணிவிடலாம் என நினைத்துக் கொண்டிருந்தோம். கூடவே மனதில் சற்று குழப்பமாக இருந்தது. குருஜியிடமும் ஆண்டவனிடமும் எல்லாம் நல்லபடி நடத்தித் தரவேண்டும் என வேண்டிக் கொண்டோம். குருஜியிடம் நேராகவும் வந்து கூறும் போது குருஜி அந்த ஸ்கேன் பிலிமை எடுத்து வந்து காண்பிக்குமாறு ஆக்ஞையிட்டார்கள்.

இந்த இடைவெளியில் முதலில் நாங்கள் காண்பித்த டாக்டரிடம் மறுமுறை பரிசோதனைக்குச் சென்ற போது ஆபரேஷனுக்குமுன் Ortho டாக்டரிடமும் ஒரு opinion வாங்கிவரச் சொன்னார். Ortho டாக்டரிடம் காட்டியதில், வலிக்கும் அந்தக் கட்டிக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறினார். வேறு ஒரு சிகிச்சை செய்து வலி குணமடைந்து விட்டது. குருஜியிடம் ஸ்கேனைக் காட்டி இது விவரமும் கூறினோம். குருஜி அதைப் பார்த்துவிட்டு எல்லாம் சரியாகிவிடும் ஆபரேஷன் தேவையில்லை எனக் கூறினார்கள். அது படியே முதலில் காட்டிய டாக்டரிடம் சில காரணங்களைக் கூறி ஆபரேஷன் செய்யாமல் விட்டுவிட்டோம். குருஜியின் கருணையால்தான் Ortho doctor யிடம் காட்டச் சொல்லுமாறு எங்கள் டாக்டருக்கு எண்ணம் வந்தது போலும். வலிக்குக் காரணம் வேறு என்பதும் புலனாயிற்று. குருஜியின் திருக்கரம் அந்த ஸ்கேனில் பட்டவுடனே அந்தக் கட்டியும் கரைந்தோடிவிட்டது.

எனது நண்பர் ஒருவர் ஓய்வுபெற இரண்டு வாரம்தான் இருந்தது. அதற்கான ஆர்டரும் வந்து அவருக்கு பிரிவுபசார

விழாகூட முடிந்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவரை நான் குருஜியிடம் கூட்டி வந்தேன். அவரும் குருஜியை வணங்கிவிட்டு, தான் ரிடையராகப் போவதாகவும் அவர் வசிக்கும் இடத்தில் உள்ள பெருமாள் கோவிலில் புதிதாக தாயார் சந்நதி வைக்க ஏற்பாடு செய்து, தான் அந்த கமிட்டியில் இருப்பதாகவும் அந்த இறை பணி முடியும்வரை அந்த வேலையில் நீடித்திருந்தால் நன்கு இருக்கும், அந்தப் பணியையும் நன்கு முடித்துத்தர வேண்டும் என குருஜியிடம் அனுக்ரகம் கேட்டு வணங்கினார். குருஜி சற்று தியானத்தில் இருந்துவிட்டு அந்தப் பணி நன்கு நடக்கும். அது முடியும்வரை வேலையிலும் நீடிப்பார் என ஆசிர்வதித்து அனுப்பினார்கள். நாட்கள் ஓடின, எனது நண்பரும் என்ன செய்வதென்று புரியாமல் குழப்பத்தில் இருந்தார். ஏனெனில் கம்பெனி சேர்மனைப் பார்க்க நேரம் கேட்டும் கடைசி வரை கிடைக்கவில்லை. இருப்பினும் குருஜியின் அனுக்கிரகத்தினால் கடைசி நாள் சேர்மனைப் பார்க்கும் வாய்ப்பும் கிடைத்தது. இந்தக் கோவில் பணிகள் பற்றிக் கூறும்போது இன்னும் ஆறு மாதங்கள் வரை 'அட்வைஸர்' என்ற பொறுப்பில் இருக்கட்டும் என்ற உத்திரவும் கிடைத்தது. இத்தனையும் ஸ்ரீ குருஜியின் கருணையினால் தான் நடந்தது என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.

**- பி. ஆதிமூர்த்தி**

---

*இந்த உலகத்தில் பகவத் பக்திக்கு அனுகூலமான பத்தினியும் புத்திரர்களும் இருந்து எளிமையான வாழ்க்கையும் ஒருவனுக்கு அமையுமானால், அவனுக்கு இதைத்தவிர ஸுவர்க்கமோ வைகுண்டமோ பெரியதாக இருக்காது என்பது என்னுடைய அபிப்ராயம்.*

**-குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்**

# ஸ்ரீ குருஜி-3

ஸ்ரீ குருஜியுடன் பேசிக் கொண்டிருந்த போது, அவர் வாய் முகமாகக் கூறிய, அவரது வாழ்க்கைச் சம்பவங்களைத் தொகுத்து எழுதுவதின் தொடர்ச்சி.

– எஸ். ஜயராம்

**எ**ன்னுடைய இளமைக் காலங்களில், எனக்கு ஏற்பட்ட எவ்வளவோ கனவுகளும், காட்சிகளும் அப்படியே பலித்திருப்பதை அநேக முறைகள் கண்டு ஆச்சர்யம் அடைந்திருக்கின்றேன். என் வாழ்க்கையில் நடந்துள்ள பல சம்பவங்களும் ஆச்சரியமாக உள்ளன.

நான் வெகு நாட்களாக, திருப்பதி சென்று ஸ்ரீநிவாசப் பெருமாளைத் தரிசனம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் ஏனோ என்னைப் பெருமாள் வெகு நாட்கள் வரை அழைக்கவில்லை. எப்போது திருப்பதி போகலாம், எப்படியாவது ஸ்ரீநிவாசப் பெருமாளை ஸேவிக்க வேண்டுமே என்று ஏங்கிக் கொண்டே இருப்பேன். யாராவது எனது நண்பர்கள் திருப்பதி போய் பெருமாளை ஸேவித்து வந்ததைக் கூறினால், ஆசையுடன் கேட்டு விட்டு நம்மைப் பெருமாள் இன்னும் கூப்பிடவில்லையே என்று ஏங்கிக் கொண்டே இருப்பேன். பள்ளியில் படிக்கும்பொழுது எனது தோழர்களிடம் எல்லாம் எனக்குத் தெரிந்த பக்திக் கதைகளையெல்லாம் சொல்லுவேன். சில தோழர்கள் என்னிடம் வந்து ஆசையாகக் கேட்பார்கள். சிலர் என்னைப் பரிகாசம் செய்வார்கள். ஒருநாள் எனக்கு ஒரு கனவு வந்தது அதில் ஒரு பெரிய பெருமாளை (உலகளந்த பெருமாள்) நான் ஸேவிப்பது போன்றும், பிறகு மலை மேல் ஏறி அங்கு உள்ள ஒரு அழகிய கோவிலில் ஸ்ரீநிவாசனை தரிசனம் செய்வது போன்றும் ஒரு காட்சி. இது பசுமையாக எனக்கு நினைவில் இருந்து கொண்டே வந்தது.

இந்த கனவு வந்து சில நாட்கள் கழித்து, ஒரு சம்பவம். நான் பள்ளியில் படிக்கும் பொழுது மதியம் இடை வேளை விடுவார்கள். அப்போது சகலமானவர்களும் கைகள் அலம்பும் நீரும் சாக்கடையும் சேரும் இடத்தில் ஒரு சிறிய ஸ்ரீநிவாசப் பெருமாள் படம் இருந்தது. எனக்கு அதைப் பார்க்கப் பார்க்க அழுகையாக வந்தது. அது ஒரு சாதாரண நோட்டுப் புத்தகத்தின் அட்டைப்படப் பேப்பர்தான். எல்லோர் முன்னிலையிலும் சாக்கடையில் நடந்து அதை எடுக்க எனக்குச் சற்று சங்கோஜமாக இருந்தது. உணவு இடைவேளைக்குப் பிறகு பள்ளி ஆரம்பித்தவுடன், என்னால் வகுப்பில் கவனம் செலுத்தவே முடியவில்லை. இப்படி பெருமாள் சாக்கடையில் இருக்கிறாரே என்ற நினைப்பு என்னை மிகவும் பாதித்தது. அழுகை அழுகையாக வந்தது. உடனே வாத்தியாரிடம் ஏதோ சாக்கு சொல்லி வெளியே வந்து அந்தப் படத்தை ஜாக்கிரதையாக எடுத்து என்னுடைய நோட் புத்தகம் ஒன்றில் பத்திரப் படுத்தியவுடன்தான் எனக்கு நிம்மதியாக இருந்தது.

அன்று மாலையே ஆச்சரியமாக என் பெரிய தமையனாருடன் சிலர் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்த ஒரு பேருந்தில் (Bus) முதன் முதலாக திருப்பதி செல்லும் பாக்கியம் கிடைத்தது. முதலில் காஞ்சிபுரம் சென்று பிறகு திருப்பதி செல்வதாக அவர்களுடைய திட்டம். காஞ்சிபுரத்தில் காமாக்ஷி அம்மன், ஏகாம்பரேச்வரர், வரதராஜர் கோயில்களில் தரிசனம் செய்த பிறகு உலகளந்த பெருமாளை தரிசித்தோம். எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. நான் முன்பு ஒரு கனவு கண்டேனே, அதே கோயில், அதே பெருமாள். அது போல் திருப்பதி சென்று பெருமாளை ஸேவிக்கும் பொழுதும் பார்த்தால் நான் கனவில் கண்ட மாதிரியே அமைந்திருந்தது மலைமேல் உள்ள கோயிலின் அமைப்பும். எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. நம்மை நேரில் இப்பொழுதுதான் அழைத்திருக்கிறார் என்றாலும், எப்போதோ எனக்குக் கனவில் வந்து தரிசனம் கொடுத்து விட்டாரே என்று பலமுறை நான் பெருமாளை ஸேவித்ததையே நினைத்து நினைத்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பேன்.

என்னுடைய அத்தை கும்பகோணத்துக்குப் பக்கத்தில் உள்ள திருமங்கலக்குடி என்னும் கிராமத்தில் வசித்து வந்தார்கள். நான் பள்ளிக்கூட விடுமுறைகளில் அங்கு செல்வதுண்டு. ஒரு முறை அப்படி பள்ளி விடுமுறைக்கு அங்கே சென்றபொழுது, எனது உறவினர்கள் சிலருடன் அருகில் உள்ள கோவிந்தபுரம் சென்றோம். எனக்கு அப்பொழுது சுமார் பத்து வயது இருக்கலாம். காவேரி தீரமும், அமைதியான அதிஷ்டானமும், மகா சாந்நித்யமும், அழகான தென்னை மரங்களும், வாழை மரங்களும் சூழ்ந்துள்ள அழகிய கிராமமும் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டன. இப்போது ஸ்ரீ போதேந்திராள் அதிஷ்டானத்தைச் சுற்றி கட்டடங்கள் எல்லாம் உள்ளனவே, முன்பு இவையெல்லாம் கிடையாது. அதிஷ்டானத்தைச் சுற்றி உள்ள ஓட்டுக் கட்டடத்துடன் சரி. ஒரு பாகவதர் மட்டும் அங்கு இருந்து கொண்டு இருந்தார். அவர் பெயர் ராஜா பாகவதர் என்று ஞாபகம். அங்கு சிறிது நேரம் அமர்ந்து ராம நாம ஜபம் செய்தேன். எனக்கு எல்லையற்ற ஆனந்தமும், பரவசமும் ஏற்பட்டன. அங்கிருந்து கிளம்பி வருவதற்கே மனம் வரவில்லை. ஆனால் உறவினர்கள் கிளம்பியவுடன் அகாலம் ஆகிவிட்டதால் நானும் கிளம்பி வந்துவிட்டேன். ஆனால், கிளம்பும் போது நாம் எப்படியாவது கோவிந்தபுரம் வந்து தங்கியிருந்து போதேந்திராள் ஸேவையில் ஈடுபட்டு ராம நாம தவம் இயற்ற வேண்டும் என்று உறுதியுடன் நினைத்துக் கொண்டேன்.

என்னுடைய தோழர்கள் யாராவது, நான் டாக்டராகப் போகின்றேன், வக்கீலாகப் போகின்றேன் என்று என்னிடம் கூறிவிட்டு உன்னுடைய நோக்கம் (aim) என்ன என்று கேட்டால், நான் கோவிந்தபுரம் போய் அமைதியாக அமர்ந்து தவம் செய்யப் போகிறேன் என்று கூறி விடுவேன். இன்றைக்குக் கூட என்னுடைய பழைய நண்பர்கள் என்னைப் பார்த்தால், நீ கோவிந்தபுரமோ, கோபாலபுரமோ ஒரு ஊர் சொல்லிக் கொண்டிருந்தாயே, அங்கு போய் தங்கவில்லையா (Settle down) என்று கேட்பதுண்டு.

இதைக் கேட்பதற்கு எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். ஏனென்றால், கோவிந்தபுரம் என்ற ஊரின் சிந்தனையே நம்மை இப்படி இளமையில் ஆட்கொண்டிருக்கின்றதே என்பதை நினைத்து. அதற்குப் பிறகும் பல முறை நான் கோவிந்தபுரம் செல்வதுண்டு. என் அத்தை வீட்டிற்குப் போகும் போதெல்லாம் கோவிந்தபுரம் சென்று வருவேன். ஐந்தாறு வருடங்கள் முன்பு கூட அங்கு நான் பத்து நாட்கள் தங்கி இருந்து குரு கைங்கர்யமும் பாகவத கைங்கர்யமும் செய்து கொண்டும், ராம நாம ஜபம் செய்து கொண்டும், மாலையில் பாகவத உபன்யாசமும் செய்தேன்.

அங்கு நான் பாகவத உபன்யாசம் செய்ததே ஒரு விசித்திரம். நான் ராம நாம ஜபம் செய்து கொண்டு அமைதியாக இருக்கலாம் என்றுதான் அங்கு சென்றேன். அப்பொழுது அங்கிருந்த ஒரு பாகவதருடன் காலையில் அதிஷ்டானம் முன்பு பேசிக்கொண்டிருக்கும் போது, திடீரென்று ''குருநாதரைப் பற்றி உபன்யாசம் செய்யுங்களேன்'' என்று அவர் கூறினார். அவருக்கு நான் உபன்யாசம் செய்வேன் என்பதெல்லாம் தெரியாது. முதலில் ஆச்சார்யாள் அதிஷ்டானத்தின் முன்பு பேசுவதற்கேப் பயமாக இருந்தது. பிறகு, தாயார் முன்னிலையில் குழந்தை பேசினால் எத்தனை தவறாக இருந்தாலும் ஒன்றும் பொருட்டில்லை அல்லவா என்ற பாவத்துடன் குருநாதரைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆரம்பித்தேன். கூடியிருந்தவர்கள் அதைக் கேட்டுவிட்டு மிகவும் சந்தோஷமடைந்து, இன்று மாலை முதல் பாகவதம் சொல்ல வேண்டும் என்று மிகவும் நிர்ப்பந்தித்தார்கள். பிறகு பாகவதம் சொன்னேன்.

இப்படித்தான் நான் பிரவசனங்கள் செய்ய ஆரம்பித்தது. இது மாதிரி பல அனுபவங்கள் எனக்கு அதிஷ்டானத்தில் ஏற்பட்டுள்ளன. இப்பொழுது ஒன்றே ஒன்றை மட்டும் கூறுகின்றேன். பிறகு, சமயம் வரும்போது மீதி எல்லாவற்றையும் விவரிக்கின்றேன். ஒரு நாள் மதியம் சுமார் இரண்டு அல்லது

மூன்று மணி இருக்கும். நான் அதிஷ்டானத்தில் அமர்ந்து ராம நாம ஜபம் செய்து கொண்டு இருந்தேன். சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டு ஜபம் செய்வேன். பிறகு சிறிது நேரம் கண்களைத் திறந்தவாறு அதிஷ்டானத்தையேப் பார்த்துக் கொண்டிருப்பேன். அப்படி பார்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு முறை ''இன்றைக்கு நீ தான் எனக்கு அர்ச்சனை செய்யப் போகிறாய்'' என்று குருநாதர் கூறுவது போல் தோன்றியது. நான் இதைப் பிரமையாக இருக்கலாம் என்று எவ்வளவோ தள்ள முயற்சித்தும், மீண்டும் மீண்டும் அப்படியே உள்ளுணர்வில் உதித்தவாறு இருந்தது.

மாலை நான் காவேரியில் ஸ்நானம் செய்துவிட்டு, ஸந்தியா வந்தனம் எல்லாம் முடித்துவிட்டு, அதிஷ்டானம் முன்பு அமர்ந்து, சிறிது நேரம் ஸ்தோத்திரங்களோ அல்லது கீர்த்தனைகளோ பாடுவோம் என்று அமர்ந்தேன். மங்கலான ஒரு பல்பு மட்டும் அதிஷ்டானம் முன்பு எரிந்து கொண்டிருந்தது. அன்று குரு வாரம் (வியாழக்கிழமை). பக்கத்தில் உள்ள வேப்பத்தூரிலிருந்து ஒருவர் அர்ச்சனை செய்ய வந்தார். அதிஷ்டானத்தைப் பூஜை செய்து வந்த பாகவதர், புத்தகத்தைப் பார்த்து அர்ச்சனை செய்ய ஆரம்பித்தார். மங்கலான விளக்கு வெளிச்சத்தில் அவரால் அர்ச்சனை நாமாவளி படிக்க முடியவில்லை. திரும்பிப் பார்த்தார். நான் அமர்ந்திருந்தேன். என்னைக் கூப்பிட்டு, ''எனக்கு கண் பார்வை மங்கிவிட்டது, நீயே படித்து அர்ச்சனை செய்'' எனக் கூறினார். எனக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. குருநாதர் எனக்களித்த பாக்கியத்தை நினைத்துப் பரவசமடைந்தேன். அன்று இரவு இதையே நினைத்துப் படுத்துக் கொண்டிருந்தேன். மிகவும் சந்தோஷமாக இருந்தது.

*(தொடரும்)*

# யுக தர்ம ஸ்தாபகர்கள் - 4

## ஸ்ரீ பகவன்னாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

- தொடர்ச்சி

நாம் இந்திரியங்களால் அனுபவிக்கும் ஸுகம், சிற்றின்பம் என்னும் ஆத்மானுபவமே உண்மையான ஆனந்தம் என்றும், அதற்கு இணையாக ஏதும் கிடையாது என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அதை ஸம்ஸாரிகளான மக்களும் அடைந்து விட்டதாக ஆனந்தப்படும் ஓர் ஸமயம்! அது தான் ஆத்ம பந்துவான நம் குருதேவரின் சரண ஸ்பர்ச ஸுகம் கிடைக்கும் தருணம். அன்பர்கள் ஸ்ரீ புருஷோத்தமன் வெகு நாட்களுக்குப் பிறகு குருதேவனை அடைந்த ஆனந்தம் வாக்கிற்கு எட்டாதது. புருஷோத்தமன் விச்வாதிகேந்திரரிடம் ஞான ஸாகரன் இவ்வுலகை நீத்துவிட்டதையும் தான் அவனுடன் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி ப்ராண த்யாகம் செய்யப் போவதாயும் விண்ணப்பித்துக் கொண்டார். குரு ஸ்வாமிகள் தீர்கமான ஓர் பெரு மூச்சுவிட்டு சிறிது சிந்தித்தவாறு கூறலானார். 'புருஷோத்தமா! உன்னால் பல கோடி ஜீவன்கள் உத்தாரணமாக வேண்டி செய்ய வேண்டிய பணிகள் இருக்கின்றன. நீ செய்த ப்ரதிக்ஞையும் பொய்யாகக் கூடாது. எனவே ஈச்வர ஸங்கல்பம் இவ்வாறு உள்ளது போலும். நீ ஸன்யாஸாஸ்ரமம் ஏற்றுக் கொள்வது ஒன்று தான் இப்போது உன் ப்ரதிக்ஞையைக் காக்கவும் உலகு உய்ந்து போகவும் ஒரே வழி. ஸன்யாஸம் பெற்றுக் கொள்வது புனர் ஜீவனம் என்பதால் நீ இப்போது தேஹ த்யாகம் செய்ய வேண்டாம். ஆனால் உங்கள் இருவருக்கும் இருந்த உத்தம நட்பை எண்ணி ஆனந்தப் படுகிறேன்' என்றார்.

ஞான வைராக்யங்களுக்கு ஸாம்ராஜ்யமாகத் திகழும் அந்த வாராணஸி க்ஷேத்திரத்தில் ஞான வைராக்ய பூர்ணரான புருஷோத்தமன் தனது ஆசார்யனிடமிருந்து ஸன்யா

ஸாச்ரமத்தை விதிப்படி ஏற்றார். ஆச்ரம நாமம் '**ஸ்ரீ பகவன்னாம போதேந்திரர்**' என விச்வாதிகேந்திரரால் சூட்டப்பட்டது. கலி ரோகத்தினால் உணர்வு - போதம் இழந்து கிடக்கும் உலகிற்கு பகவன்னாமமாகிய போதத்தை புகுத்தப் போவதால், இப்பெயர் மிகப் பொருத்தமாக அமைந்தது. ஸ்ரீ பகவன்னாம போதேந்திரர் காசியில் குரு ஸேவையும் ஆச்ரம தர்மங்களையும் அனுஷ்டித்துக் கொண்டு ப்ரதி தினமும் 1,08,000 நாம ஜபம் செய்து வந்தார். அங்கிருக்கும் ஸ்ரீந்ருஸிம்மாச்ரமி ஸ்வாமிகள் என்பவர் சேர்த்து வைத்துள்ள நாம ஸித்தாந்த க்ரந்தங்களையும் அவருடன் சேர்ந்து பார்த்து அளவளாவி மகிழ்ந்து வந்தார்.

தக்ஷிணை தேசத்தில் நாமப் ப்ரசாரம் மிகவும் துர்லபமாக இருப்பதைக் கருதி குரு ஸ்வாமிகள் ஸ்ரீ போதேந்திரரிடம், புரி க்ஷேத்ரத்தில் லக்ஷ்மீதர கவி இயற்றிய நாம ஸித்தாந்த க்ரந்தத்தை பெற்றுக் கொண்டு காஞ்சீ மடம் சென்று நாம ஸித்தாந்த க்ரந்தங்களை இயற்றுமாறும், தான் கூடிய சீக்கிரம் அங்கு வந்துவிடுவதாகவும் கூறி விடை கொடுத்து அனுப்பினார்.

குருதேவரின் ஆக்ஞையைப் பெற்று பல க்ஷேத்திரங்களை தர்சித்துக் கொண்டே ஜகன்னாதபுரி வந்த ஸ்ரீ போதேந்திரர், லக்ஷ்மீதர கவியைப் பற்றி விசாரிக்க, ஊர் மக்கள் அனைவரும் அவரைப் போற்றிவிட்டு தற்போது அவர் பரம பதம் அடைந்துவிட்டதாயும் அவரின் புதல்வர் ஜகன்னாத கவி பாகவத தர்ம நிஷ்டையுடன் தன் தந்தையைப் போலவே விளங்கி வருவதாகவும் கூறி வீட்டையும் காட்டினார். ஆனால் அப்போது இரவு நேரமாதலால் அந்த வீட்டின் திண்ணையிலேயே அமர்ந்தார். விடியும் முன்பே இரவின் மூன்றாவது சாமத்தில் ஓர் அந்தண தம்பதிகள் அவ்வீட்டை அடைந்து கதவைத் தட்டவும் கதவு திறக்கப்பட்டது. உள்ளேயிருந்து அதி தேஜஸ்வியான ஜகன்னாத கவி நாம கானம் செய்து கொண்டே கதவைத் திறந்தார். தம்பதிகள் இருவரும்

அவரது திருவடியில் வீழ்ந்து பணிந்தனர். அவ்வந்தணன் தொண்டை தழுதழுத்தலுடன் பின் வருமாறு அவர்களின் உருக்கமான கதையைக் கூறினான்.

ஸ்வாமி! நாங்களிருவரும் தென்னாட்டவர்கள். யாத்திரையாக கிளம்பி கிராமம் கிராமமாக தங்கி சென்று கொண்டிருக்கையில் ஒரு வழியில் ஓர் கிராமத்தின் சத்திரத்தில் இரவு நேரத்தில் தங்கினோம். வழி நடந்த களைப்பில் அசந்து தூங்கி விட்டோம். விடிந்ததும் என் மனைவியைக் காணாது ஊர் முழுவதும் அலைந்து திரிந்து விசாரிக்க, கிராம மக்கள், அப்பா, உன் மனைவி உனக்கு இனி எப்படி கிடைப்பாள். நீங்களிருவரும் எங்கள் வீடுகளில் தங்கியிருந்திருக்க வேண்டும். இது மிலேச்சர்களின் கலவரக் காலம். ஹிந்துப் பெண்களை பலவந்தமாக தூக்கிச் செல்வதெல்லாம் இங்கு அதிகம். மனதைத் தேற்றிக் கொள் என்று கூறி கண்ணீர் விட்டனர். நானும் எனது மனதை சமாதானப்படுத்த முயற்சித்தப்படி தீர்த்த யாத்ரை மேற்கொண்டு திரும்பி வரும் வழியில் அதே கிராமத்திற்கு தற்செயலாக வந்து ஓர் குளக்கரையில் அனுஷ்டானம் செய்கையில் ஓர் பெண் 'நாதா' என்றலறியபடி என் காலில் விழ, திடுக்கிட்டேன். அவளை, ம்லேச்சர்கள் வசப்பட்டு ம்லேச்ச வேஷத்தில் இருந்ததால் என் மனைவி என அறிய தாமதமாயிற்று. அவளோ, ஸ்வாமி நான் உங்களது தர்ம பத்னியாக இனி இருக்க அருகதையற்றவளாயினும் உங்கள் வீட்டு மாட்டுத்தொழுவம் இவற்றை சுத்தம் செய்து கொண்டு அடிமையாகவாவது இருப்பேன். உடனே என்னை அழைத்துக் கொண்டு இங்கிருந்து ஓடுங்கள். துஷ்டர்கள் வந்து விடுவர் என அலறியதும் நான் செய்வதறியாது திகைத்துப் பின் இவளுடன் ஓட்டமும் நடையுமாகக் கிளம்பி பல வித்வான்களையும் பார்த்து எங்களுக்குப் பிராயச்சித்தம் உண்டா என கேட்க, அனைவரும் நீரே அதை விதிக்க வல்லவர் என்க, தங்களை நாடி வந்துள்ளோம். உம் ஆக்ஞைக்குக் கட்டுப்படுவோம் என்று தழுதழுத்தலுடன் கூறி முடித்தார்,

ஜகன்னாத கவியோ எந்த தயக்கமும் பரபரப்பும் இல்லாமல் பரம சாந்த ஸ்வபாவத்துடன் அப்பா! உன் மனைவியை 'ராம ராம ராம' என்று கூறச் செய்து நீ உனது தர்மபத்தினியாகவே ஏற்றுக் கொள்ளலாம் என்றார். அப்போது உள்ளேயிருந்த அவரது வயது முதிர்ந்த அன்னை, குழந்தாய்! உன் தந்தை எந்த பாபத்திற்கும் 'ராம' என ஒரு தரம் கூறுவதையே பிராயச்சித்தமாகக் கூறுவார். நீ மும்முறை ஏன் கூறச் சொல்கிறாய்? என வினவ, இதைக்கேட்டு ஆனந்த பரவசரான ஸ்ரீ போதேந்திரர் திண்ணையிலிருந்து இறங்கி, இதற்கேதேனும் ஆதார கிரந்தம் உள்ளதோ? எனக் கேட்க, யாவரும் சற்றும் எதிர்பாராது அந்த இருளில் திடீரென பகவத்பாதரேயோ என வியத்தகும் தேஜஸுடன் தோன்றிய 'ஸ்வாமிகளை ஆச்சர்யத்துடனும் பக்தியுடனும் பார்த்துப் பணிந்தனர். ஜகன்னாத கவி தன் தந்தையின் 'பகவன்னாம கௌமுதி' எனும் ப்ரமாண க்ரந்தம் உள்ளதென விவரமாகக் கூற, ஸ்வாமிகள் அதைத் தான் பார்க்க வேண்டும் என்றார். பிறகு ஸ்ரீ ஜகந்நாத கவியைப் பார்த்து ஸ்ரீ ஸ்வாமிகள் மிக்கக் கம்பீரமாக கூறலானார். அன்பரே! பகவன்னாம மாஹாத்ம்யம் ஸத்யம். ஆனால் இதை உலகறிய பிரகடனம் செய்ய வேண்டும். ஸீதை சுத்தமானவள் என அறிந்திருந்தும் ஸ்ரீ ராமர் உலகறிய அவளை அக்னி பரிசுத்தி செய்து க்ரஹித்தாரல்லவா? இந்தப் பெண் நாளை காலை கோயில் குளத்தில் பொது மக்கள் முன் இதே ம்லேச்ச வேஷத்துடன் ராம நாம கீர்த்தனம் செய்து கொண்டு மூழ்கி எழுகையில் நம் பாரத தேசத்தின் ஸாத்விகளுக்குரிய அலங்காரத்துடன் எழுந்திருப்பாள். நாம ப்ரபாவத்தை உலகம் காணட்டும்' என்றார்.

இத்தகைய நிகழ்ச்சி ஸ்ரீ ஸ்வாமிகளைப் போன்ற மஹா புருஷர்களால்தான் நிகழ்த்த முடியும். நாமமே வடிவான அவரின் வாக்கை ராமர் ஸத்யமாக்குகிறார். ராம மாஹாத்ம்யம் ஸத்யம். அதனால் அனைவரும் பலனடைவர். அதை நிரூபிக்க இத்தகைய பெரியோர்களாலேயே முடியும்.

மறுநாள் குளக்கரையில் பல்லாயிரம் ஜனங்கள் திரண்டிருக்க அந்தப் பெண் குரு தேவரின் திருவடியை த்யானம் செய்தபடி அவரிடம் திடவிச்வாசத்துடன் ராம நாமம் சொல்லிக் கொண்டு மூழ்கி எழுந்தாள். என்ன ஆச்சர்யம்! அவள் வகிட்டில் ஸிந்தூரம் மின்ன ஸாத்விகளுக்கான ஆபரணம் உசிதமான வஸ்த்ரத்துடன் தோன்றினாள். அனைவரும் ஹரி! ஹரி! கோவிந்த! ராம! ஜகன்னாத ப்ரபோ! என்று நாம கோஷம் பாவ பரவசத்துடன் செய்தது விண்ணைப் பிளந்தது. ஸ்வாமிகளின் ப்ரபாவத்தையும் ராம வைபவத்தையும் ச்லாகித்தனர்.

பல்லாயிரம் ஜனங்கள் ராம கோஷத்துடன் பின் தொடர மத யானை போல் கம்பீரமாக ஜகன்னாத கவி வீடு வந்து ஸ்வாமிகள் அந்த அந்தண மனைவி கையாலேயே அன்று தான் பிக்ஷையும் ஏற்று அவள் சுத்தியானதை மேலும் ஊர்ஜிதமாக்கினார்.

ஸ்ரீ ராகவன் ஓர் அஹல்யையை உத்தாரணம் செய்தார். ஸ்ரீ ராம நாமமோ எத்தனையோ பதிதர்களையும், ப்ரஷ்டர்களையும் உத்தாரணம் செய்கிறது. ஸ்ரீ போதேந்திராள் அங்கு பல ஜனங்களுக்கும் நாமோபதேசம் செய்து விட்டு லக்ஷ்மீதரரின் நாம ஸித்தாந்த கிரந்தத்தின் ப்ரதியுடன் ஸ்ரீ காஞ்சி வந்தடைந்தார்.

*(தொடரும்)*

**- பரனூர் ஸ்ரீகாந்த சர்மா**

# பிரார்த்தனை

- ஸ்ரீ குருஜி

சாதாரணமாக உலகத்தில் சந்தோஷமும் துக்கமும் காணக்கிடைக்கின்றது. ஒரு பக்கம் கல்யாணம், உத்ஸவங்கள், விளையாட்டுகள், பாட்டு, கூத்து, கேளிக்கை விளையாட்டுகள். மறு பக்கம் வியாதி, முதுமை, பண வீக்கம், வேலையின்மை, பொறாமை, போட்டி, சந்தேகம், சச்சரவுகள் இப்படியாக உள்ளது உலகம். இப்படி சம்ஸாரத்தில் உழலும் போது எவ்வளவோ சமாசாரங்கள். யார் இதிலிருந்து விடுபட விரும்புகிறார்களோ அவர்கள் தங்களை முழுவதுமாக ஸம்ஸார வாழ்க்கையிலிருந்து விடுபடுத்திக் கொண்டு தெய்வீக வாழ்க்கையில் ஈடுபடுத்திக் கொண்டு விடுகின்றனர். ஸம்ஸாரத்தில் தைர்யமாக பிரவேசிக்கும் ஜனங்களுக்கு யாருக்குத்தான் இது துக்கமுள்ளது என்று தெரியாது! பிறருக்கு வரும் மரணம், வியாதி, கஷ்டங்களை கண் கூடாக பார்க்கிறார்கள் அல்லவா? ஆகவே அவர்களுக்கு ஏற்படும் சிரமங்கள் தனக்கும் எப்பொழுது வேண்டுமானாலும் வரும் என்று தெரியுமல்லவா? ஆகவே அது தெரிந்துதானே அவன் ஸம்ஸார வாழ்க்கையில் ஈடுபடுகின்றான்! ஆகவே தெய்வத்தைக் குறை கூறி ஒன்றும் பிரயோஜனமில்லை.

சிலர் நாம் பகவானை நம்பினால், கடவுளே நம் குடும்ப பொறுப்பை வகிப்பான் என்று கூறுகிறார்களே; ஆனால் நான் கஷ்டப்படுகிறேனே என்று கேட்பார்கள். அவர்கள் பகவானையோ, குருவையோ தான் நம்புவதாக கூறிக் கொண்டு சோம்பேறிகளாக வாழ்வார்கள். அதாவது சினிமா, டீவி, பார்ட்டி, ஊர் வம்பு என்று வாழ்ந்துவிட்டு கடவுள் தனக்கு அருள் செய்யவில்லை என்று குறை கூறுவார்கள். பகவான்

யாருடைய குடும்ப பாரத்தை வகிப்பான் தெரியுமா? யார் அவனுக்காகவே தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டு எதைப்பற்றியும் கவலை இல்லாமல் எப்பொழுதும் அவனுக்குத் தொண்டு செய்து கொண்டு, அவன் புகழைப் பாடி, அவன் கதையை ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு அவனையே ஸ்மரித்துக் கொண்டு வாழ்கின்றார்களோ அவர்களுடைய எவ்வளவு பாரத்தையும் பகவான் தாங்கத் தயாராக இருக்கின்றான். சோம்பேறிகளாக வாழ்பவர்களின் பாரத்தை, தான் வகிப்பதாக ஒருக்காலும் யாருக்கும் எப்பொழுதும் எங்கும் பகவான் வாக்குக் கொடுக்கவில்லை. ஆகவே, ஸம்ஸாரத்தில் பிரவேசித்து அதைச் சரியாக நிர்வகிக்கத் தெரியாமலும் பிராரப்த வசத்தாலும் அநேக இடையூறுகளை அடையும் ஜனங்கள் இறைவனை பிரார்த்திக்கின்றார்கள். பிரார்த்தனைகளுக்கு பலன் உண்டு. யார் யார் எதை யாசித்துக் கொண்டு பிரார்த்திக்கின்றார்களோ, அதை அதை பூர்த்தி செய்து வைக்கின்றான். நம்முடைய விஸ்வாசத்துக்கு தகுந்த அளவுக்கு பலன் ஏற்படுகின்றது.

எல்லாவற்றிலும் மூன்று நிலை உண்டு. ஒருவன் புலால் உண்பதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டிருந்தான். சங்கல்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அலட்சியம் செய்துவிட்டு வேறு ஆகாரங்கள் கிடைக்கும் பொழுதும் புலாலை சாப்பிடுபவன் அதமன். ஒரு பிரதேசத்தில் புலாலைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். ஆகாரம் இல்லாவிட்டால் உயிர் நிற்காது என்ற நிலைமை. அங்கு அவன் உயிரைக் காப்பாற்றி கொள்ளும் அளவுக்கு புலால் ஆகாரத்தை எடுத்துக் கொண்டால் மத்யமன். உயிர் போனாலும் பரவாயில்லை ஒருக்காலும் என்னுடைய சங்கல்பத்தை மீறமாட்டேன் என்று உயிரையும் துச்சமாக நினைக்கின்றவன் உத்தமன்.

அது போல ஒருவன் நினைவு தெரிந்த முதல் காசிக்கு போகமாட்டேனா, கங்கா ஸ்நானம் பண்ணமாட்டேனா என்று தவித்து, உருகி, காசி யாத்ரையையும் கங்கா ஸ்நானத்தையும் செய்கின்றானோ அவனுக்கு உத்தம பலன். யாரோ சொன்னார்கள் என்று கிளம்பி ஸ்நானம் செய்து காசிக்குச் சென்று கங்கா ஸ்நானத்தை சிரத்தையுடன் செய்பவனுக்கு மத்யம பலன். எதிலும் நம்பிக்கை இல்லாமல் வேறு யாருடைய நிர்பந்தத்தின் பேரிலோ காசிக்கே சென்று, கங்கையில் ஒரு முழுக்கு போடுபவனுக்கு அல்ப பலன் ஏற்படும். ஆகவே எல்லா கார்யங்களிலும் தாபமும் சிரத்தையும் அவசியம்.

அது போல நாம் பல துக்கங்களுக்கு நடுவில், துக்கத்தின் கொடுமை தாங்காமல் பல பிரார்த்தனைகளை செய்து கொண்டு விடுவோம். அதை நிறைவேற்றுவதில் நமக்கு உள்ள அக்கறைதான் விசித்திரமானது.

குழந்தை இல்லாத தம்பதிகள் குழந்தைக்காக மிகவும் ஏங்கி தவிப்பார்கள். அந்த தம்பதிகளை ஊரில் எல்லோரும் மலடு என்று பரிகசிப்பார்கள். சுப கார்யங்களிலிருந்து ஒதுக்கி வைத்துவிடுவார்கள். யார் வீட்டில் குழந்தை பிறந்து தொட்டில் போட்டாலும் யாரும் அழைக்கமாட்டார்கள். தப்பித் தவறி, குழந்தையைப் பார்க்க வந்தால் கண்பட்டுவிடும் என்று திருஷ்டி கழிப்பார்கள். இப்படியெல்லாம் லோகம் இருக்கும் பொழுது அவர்களுடைய மனம் வேதனையினால் தவிக்கும். எனக்கு ஒரு குழந்தை பிறந்தால் நேந்திரம் பழம் துலாபாரம் தருகிறேன் என்று குருவாயூரப்பனிடம் பிரார்தித்து அழுவார்கள். குழந்தை பிறக்கும். பிறந்த உடனே சிறிது காலத்தில் பிரார்த்தனையின் ஞாபகம் போய்விடும். ஆபீஸில் லீவு இல்லை, கையில் காசு இல்லை என்று ஊட்டிக்கும் கொடைக்கானலுக்கும், கல்யாணங்களுக்கும் போய் வருவார்கள். குருவாயூருக்குப் போகவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். பெண்

குழந்தையாக இருந்தால் கல்யாணமும் பண்ணி வைத்து விடுவார்கள். புக்ககத்தில் அந்தப் பெண்ணுக்கு சிரமங்கள் ஏற்பட்டால், ஒரே குழந்தை செல்லமாக வளர்த்தோமே, இப்படி கஷ்டப்படுகின்றதே என்று துக்கம் மேலோங்கி 'குருவாயூர் பிரார்த்தனை' ஞாபகத்துக்கு வந்து ஓடுவார்கள். அப்படி சென்றும், அங்கு சென்ற உடனே வசதியான லாட்ஜாகத் தேடி, நல்ல சாப்பாட்டிற்கு வழி செய்து கொண்டு, துணி வெளுக்க லாண்டரி ஏற்பாடு செய்து கொண்டு, கையில் பணம் இருக்கும் திமிரில் துலாபாரத்துக்குப் பணமும் கட்டிவிட்டு பிரார்த்தனையை நிறைவேற்றிவிட்டதாக வந்து விடுவார்கள். மீதி விஷயத்திற்கு இவர்கள் தரும் முக்யத்துவம், சுவாமி தர்சனத்தில் இருக்காது.

பின்னே எப்படி பிரார்த்தனையை நிறைவேற்ற வேண்டும்? குழந்தை பிறந்த உடன், ஓடி எடுத்துக் கொண்டு, குருவாயூரப்பன் சன்னதியில் போட்டு, என்னே உன் கருணை! ஊரில் எப்படி என்னைப் பழித்தார்கள், பிரபோ! எப்படி என்னை ரட்சித்துள்ளாய்! இது உன் குழந்தை, என்றும் உன் கருணை எனக்கு வேண்டும் என்று கண்ணீர் மல்க நின்றால் அது ஆயிரம் துலாபாரத்துக்கு சமானமாகும் அல்லவா? ●

---

*உலகத்தில் படிப்பதற்கும், பொருள் சம்பாதிக்கவும், சுக போக வாழ்க்கைக்காகவும் பல வருடங்கள் செலவழிக்கத் தயாராக உள்ள நாம், ஆன்மீகத்தில் மட்டும் பொறுமையாக இருக்கத் தயாராக இருப்பதில்லை. உடனே சாதனைகளில் முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.*

**- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்**

# ஸத்குரு

- ஸ்ரீ குருஜி

உலகத்தில் பிராரப்தத்தின் காரணமாகத்தான் சுக துக்கங்கள் ஏற்படுவதாக நம்முடைய ஸனாதனமான மதம் கூறுகின்றது. ஆகவே சுகமான வாழ்க்கையை அடைய நிறைய புண்யம் செய்திருக்க வேண்டும். புண்யம் எது, பாவம் எது என்று முடிவெடுக்கும் விஷயத்திலும் சாஸ்திரத்தையே பிரமாணமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஏன் என்றால் நம்முடைய மனதானது காம க்ரோதாதிகளுக்கும், பக்ஷ பாதங்களுக்கும் உட்பட்டது. ஆகவே மனதை ஒருக்காலும் பிரமாணமாக வைத்துக் கொள்ளக்கூடாது. மேலும் தர்மமானது மிகவும் சூக்ஷ்மமானது. ஆகவே தர்ம சூக்ஷ்மமானது, சாஸ்திரங்கள் மூலமே அறியக்கூடியதாக உள்ளது.

உலகத்தில் நல்ல மாதா பிதாக்களை அடைந்த ஒருவனைப் பார்த்து, நல்ல புண்யத்தின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட மாதா பிதாக்களை அடைந்துள்ளான் என்று கூறுகின்றோம் அல்லவா? அது போல வித்யை, உத்யோகம், மனைவி, மக்கள் எல்லாம் நல்லபடியாக அமைவது புண்யத்தின் பலனாகத்தான் என்பது தீர்மானம்.

ஒருவனுக்கு மாதா பிதாக்களோ, மனைவியோ, மக்களோ, வித்யையோ அனுகூலமாக அமையாமல் பிரதி கூலமாக அமைவதற்கு பாபம் தான் காரணமாகின்றது.

லௌகீகமான விஷயங்களை அனுகூலமாக அடைவதற்கே புண்யம் பலனாக இருக்குமானால், ஆத்ம பந்துவான குருநாதரை அடைவதற்கு எப்பேர்ப்பட்ட புண்யம் செய்திருக்க வேண்டும்? ஆகவே ஒருவன் உண்மையான மஹாத்மாவை குருவாக அடைவதற்கு பல கோடி ஜன்மாக்களில் புண்யம் செய்திருக்க வேண்டும். இன்று குருமார்கள் என்று சொல்லிக் கொள்ளும் பலர் அவைதீகமான மார்க்கத்தைப்

பிரசாரம் செய்தும், பாஷாண்டிகளாக இருந்து கொண்டும், சித்திகளைக் காண்பித்து ஜனங்களை பிரமிக்கச் செய்தும், ஏதேதோ புரியாத விஷயங்களைச் சொல்வது போல் பிதற்றிக்கொண்டும், தானே கடவுள், அவதாரம் என்று பலவாறாக ஜனங்களை ஏமாற்றி வருகின்றனர். கலியுகத்தின் அலங்கோலமோ என்னவோ, அநேகம் பேர் நான் இந்த தெய்வத்தின் அவதாரம், அந்த தெய்வத்தின் அம்சம் என்று தானே வெட்கமில்லாமல் சொல்லிக் கொண்டு திரிகின்றனர். இது இப்படியே தொடர்ந்து கொண்டு போகுமானால் பூலோகத்தில் தெய்வங்கள் அதிகமாகி மனிதனைப் பார்ப்பது துர்லபமாகிவிடும். அதாவது யாராவது ஒருவரைப் பார்த்து மனிதன் என்று கூறுவது ஆச்சர்யமாகிவிடும் போல் உள்ளது.

இப்படி சொல்லிக்கொண்டு அலையும் இவர்களுக்குப் பின் பெரிய கூட்டம் இருக்கின்றதே என்றால் என்ன காரணம்? உலகத்தில் புண்யம் செய்தவர்கள் குறைவாகவும் பாவம் செய்தவர்கள்தான் அதிகமாக இருப்பார்கள் அல்லவா? ஆகவே செய்த பாபத்தின் விளைவாகவே அசத்துக்களின் பின் அலைந்து கொண்டு திரிகின்றார்கள். அதாவது நல்ல குருவை அடைய எப்படி புண்யம் செய்திருக்க வேண்டுமோ, அது போல பாவத்தின் பலனாகத்தான் இது மாதிரி குருமார்களிடம் மாட்டிக் கொள்கின்றார்கள்.

அப்படியானால், மஹாத்மாக்கள் என்றால் எப்படி இருப்பார்கள்? நாங்கள் எப்படி அடையாளம் கண்டு கொள்வது? ஸதா நாம ஸங்கீர்த்தனம் செய்து கொண்டு இருப்பார்கள், ஸனாதனமான மார்க்கத்தையேப் பின் பற்றுவார்கள். வினயத்துடன் இருப்பார்கள். எல்லோருடனும் ஸௌஜன்யமாக பழகுவார்கள், அவர்களுடைய வாழ்க்கை என்பது திறந்த புத்தகம் போல் ஒளிவு மறைவின்றி இருக்கும். ஸதா கருணை மழை பொழிந்து கொண்டு பிரேம ஸ்வரூப மாகவே இருப்பார்கள். அவர்களால் எப்படி இதெல்லாம் ஸாத்யமாகின்றன என்றால், ஜீவன் முக்தராக இருப்பதால்தான்.

ஆகவே பல கோடி ஜன்மாக்களில் செய்த புண்யத்தின் பலனாகவே நாம் ஸத் குருநாதரை அடைகின்றோம். ●

# ஸ்ரீ குருஜியின் பிறந்த நாள் செய்தி

நாம் அனைவரும் பாக்யசாலிகள். உலகம் மிகவும் பெரியது. கோடானு கோடி ஜீவன்கள் உலகத்தில் ஜீவிக்கின்றார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கை எப்படியெல்லாமோ இருக்க, நம் வாழ்க்கை வித்யாசமாக இருக்கின்றது. இதற்குக் காரணம் என்ன? ஸ்ரீ கிருஷ்ணன் அவனுடைய சொந்த ஜனங்களாக நம்மை எடுத்து கொண்டிருப்பதே காரணம். ஆகவே தான் நமக்கு ஸத் ஸங்கம் கிடைத்திருக்கின்றது. பெரிய பாக்யம்தான். ஆனால் இத்துடன் சந்தோஷப்பட்டு விடமுடியுமா? யாருக்கோ கைகள் இல்லாமல் இருப்பதைப் பார்த்தவுடன், ஆகா! நல்ல வேளையாக கைகள் நமக்கு ஒழுங்காக இருக்கின்றன. இதை ஜாக்ரதையாகப் பாதுகாக்க வேண்டும். உண்மைதான். இதற்கும் மேலாக இந்தக் கைகளை வைத்துக் கொண்டு எவ்வளவு நல்ல கார்யங்கள் செய்ய முடியுமோ, அவ்வளவும் செய்பவன்தானே புத்திசாலி.

அது போல, ஆகா! ஸத் ஸங்கம் (குரு) கிடைத்தது பெரிய பாக்யம்தான் என்று உணர்ந்து கொண்டு ஸத் ஸங்கத்தை பயன் படுத்திக் கொள்ள வேண்டும். ஸத் ஸங்கத்தை பயன்படுத்திக் கொள்வது என்றால் என்ன?

ஸத் ஸங்கத்தில் ஈடுபட்டும் காம க்ரோதாதிகளுடனும் சோம்பேறிகளாகவும், அநாச்சாரத்துடனும், தார்மீகமான வாழ்க்கை நடத்தாமலும் இருந்தால் ஸத் ஸங்கத்தில் ஈடுபட்ட நமக்கும், ஈடுபடாத ஒருவருக்கும் என்ன வித்யாசம்? நம்முடைய வாழ்க்கையைப் பார்த்து பிறர் பொறாமைப்படும் அளவுக்கும், ஆச்சர்யப்படும் அளவுக்கும் அமைய வேண்டுமே தவிர, பிறர் பார்த்து சிரிக்கும்படி கேலிக் கூத்தாக அமைந்து விடக்கூடாது. நான் குருநாதரை ஆச்ரயித்து அல்லது ஸத்

ஸங்கத்தை அடைந்து, இத்தனை வருடங்கள் ஆகிவிட்டன என்று கூறும் பொழுது, நாம் எந்த அளவிற்கு பரிபக்குவம் அடைந்திருக்கவேண்டும் என்பதையும் சிந்திக்க வேண்டும். வயது என்னவோ ஆகிவிட்டது, ஒரு முன்னேற்றமும் இல்லை. மனதிலும் சாந்தி இல்லை. என்ன பிரயோசனம்?

ஆரம்ப சூரன் என்று சில பேரை கூறுவதுண்டு. எந்த கார்யத்திலும் பிரவேசிக்கும்பொழுது ஒரே தீவிரமாக ஆரம்பித்து, அதில் சிரமப்பட வேண்டியிருக்கும் பொழுது ஆர்வம் குறைந்து கொஞ்சம் கொஞ்சமாக விட்டும் விடுவான். புதிதாக ஒரு வீடு கட்டினால் பார்த்துப் பார்த்து துடைத்து சுத்தமாக வைத்துக் கொள்வான். சிறிது காலத்தில் அந்த வீட்டில் ஒட்டடை படிந்து, தூசி அடைந்து அலங்கோலம் ஆகிவிடும். எதுவும் புதியதாக இருக்கும் பொழுது, அதற்கு மதிப்பு அதிகம், பழையவைகளாக ஆக ஆக, அலட்சியம் வந்துவிடும். அது போல குருவிடம் உபதேசம் வாங்கிக் கொண்ட உடனே அல்லது ஸத் ஸங்கத்தை அடைந்த உடனோ அல்லது ஏதாவது ஒரு ஸாதனைக் கிரமங்களைப் படித்தோ அல்லது கேட்டோ ஆரம்பத்தில் வெகு தீவிரமாக ஆரம்பித்து விட்டு, பிறகு விட்டு விடுவதினாலும் பிரயோஜனமில்லை. ஆகவே ஸாதனைகளைச் செய்ய ஆரம்பிக்கும் பொழுது என்ன தீவிரமும் ஆர்வமும் உள்ளதோ, அது நாளாக நாளாக வளரவேண்டும். நாம் லட்சியத்தை அடையும் வரை ஓயக்கூடாது.

மனது மிகவும் ஸஞ்சலமான சுபாவம் உடையதுதான். பற்பல ஸமயங்களில் இந்திரியங்கள் தறி கெட்டு இழுத்துப் போகும். அப்பொழுதெல்லாம் நாம் சோர்வடைந்து விடாமல் தீரனாக இருந்து எல்லாவற்றையும் எதிர்கொள்ள வேண்டும். அப்படி மனதில் ஸஞ்சலம் வரும் பொழுது எல்லாம், நாம் தீவிரமாகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அப்படி செய்யும் பிரார்த்தனைக்கு நல்ல பலன் உண்டு. நாம் தியானத்திலோ, நாம ஜபத்திலோ உட்காரும்பொழுது மனம் ஏகாக்ரமடைவதைக்

காணலாம். அது மாதிரி சமயங்களில் தீவிரமாக மனமுருகிப் பிரார்த்தனை செய்ய, நிச்சயமாக பலிதம் ஏற்படும். நான் சொல்ல வருவது என்னவென்றால் நமக்கு எது தியானம் செய்வதற்குத் தடையாக உள்ளதோ அந்த தடையைப் போக்க வேண்டும் என்று பிரார்த்தித்தால் நல்ல பலன் ஏற்படும். ஏகாக்ரப்பட்ட மனதில் பக்தியோ, ஞானமோ சுலபத்தில் ஏற்படும். மிகவும் அதிகமாகப் பேசக் கூடாது. யார் எப்பொழுதும் வள வள என்று பேசிக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களால் எந்த கார்யமும் ஆகாது. அவர்களுடைய மனதும் சஞ்சல சுபாவமுள்ளதாகவே இருக்கும்.

சுத்தமான உடைகளையே உடுத்தவேண்டும். ஆகாரங்களையும் அளவுடனும், சுத்தமாகவும், நேரப்படியும் உட்கொள்ள வேண்டும். எப்பொழுதும் பிரசன்னமாகவும், காம்பீர்யமாகவும் இருக்கவேண்டும். எதற்கும் கலங்கக்கூடாது. யார் நம்மைப்பற்றி அவதூறு பேசினாலும் கவலைப்படக்கூடாது. உலகம் என்றால் இப்படித்தான் இருக்கும் என்று போய் விடவேண்டும், கோபமே படக்கூடாது, வினயமாக இருக்க வேண்டும், ஸர்வ ஜனங்களுடனும் அன்புடன் பழக வேண்டும், மன்னிக்கின்ற தன்மையுடன் இருக்க வேண்டும். ஒருக்காலும் வீண் பொழுது போக்கக்கூடாது. எல்லாவற்றிலும் நன்மையையே காண வேண்டும். யாரையும் புண்படுத்தும் அளவிற்கு கடுஞ் சொற்களை உபயோகப்படுத்திப் பேசுவதைக் காட்டிலும் ஹிம்ஸை வேறு எதுவும் இல்லை.

இப்படியாக நாம் எதற்கு இருக்க வேண்டும் என்றால், ஸ்ரீ கிருஷ்ணன், உனக்கு வேண்டும் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும். நாம் இப்படியெல்லாம் இருந்தாலே நம்மைப் பார்ப்பதற்கு பசுவைப் போலவோ, அல்லது மான்குட்டி போலவோ ஆகிவிடுவோம். நம்மைப் பார்த்தாலே எல்லோரும் பயப்படும்படி சிங்கம் மாதிரி, புலி மாதிரி இருக்கக்கூடாது. யாரையும் பரிகாசம் செய்து பேசக் கூடாது. எப்பொழுதும்

தமாஷ், சிரிப்பு, விளையாட்டு என்று ஒரு seriousness இல்லாமல் இருந்தால் வாழ்க்கையும் எந்த லட்சியமும் இல்லாமல் விளையாட்டாகவே போய்விடும். எல்லாவற்றிலும் ஒரு seriousness அவசியம். நாம் எப்பொழுதும், நான் மிகவும் பாவி, எனக்கு அதிர்ஷ்டமே இல்லை, எனக்கு இதெல்லாம் வராது, என்பன போன்ற எதிர்மறையான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளக் கூடாது. எல்லாவற்றையும் செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கையும் தைர்யமும் வேண்டும். பிரச்சினைகளைக் கண்டு ஓடி ஒளியக் கூடாது. தைர்யத்துடனும் விவேகத்துடனும் செயல்படவேண்டும்.

எல்லாம் பகவான் செயல், நம் குடும்ப பாரத்தை அவனே வகிப்பான் என்று நான் உபதேசிப்பதை நீங்கள் சரியாக புரிந்து கொள்ளாவிடில், நீங்கள் சோம்பேறிகளாக ஆகிவிடுவீர்கள். யார் எப்பொழுதும் பகவானுடைய சிந்தனையிலேயே ஈடுபட்டு உலகத்தை மறந்து வாழ்கின்றார்களோ, அப்பேர்ப்பட்ட பக்தனுடைய பாரத்தைத் தான் பகவான் வகிக்கக் காத்துக் கொண்டுள்ளான். ஏதோ பத்து நாம ஜபம் செய்து விட்டு, கோபி இட்டுக் கொண்டு, ஒரு துளஸி மாலையும் போட்டுக் கொண்டு, இவைகளால் தன்னை பக்தன் என்று நினைத்துக் கொண்டு சினிமாவும், டீவியும் பார்த்துக் கொண்டு ஒவ்வொரு வீடாக தேடிச்சென்று வம்பு பேசி, அல்லது தனக்குத் தெரிந்த அரை குறை ஞானம், வேதாந்தம் எல்லாம் பேசி, தூங்கி, கண்டதைச் சாப்பிட்டு விட்டு வாழும் சோம்பேறிகளுடைய உலக பாரத்தை கடவுள் தான் வகிப்பதாக ஒரு நாளும் வாக்குத் தரவில்லை. ஆகவே நீங்கள் தெய்வீகத்தை அரை குறையாகப் புரிந்து கொள்வீர்களானால் சோம்பேறிகளாகிவிடுவீர்கள்.

உலகத்தில் அதிசயங்களையும், கார்ய சித்திகளையும் பார்த்து ஏமாந்து போகாதீர்கள். இவைகள் சாச்வதமானவைகள் இல்லை. அநேக மஹாத்மாக்களுடைய சரித்ரத்தை எடுத்துப்

பார்த்தாலோ, அல்லது கேட்டாலோ அவர்கள் பல பேருடைய வியாதிகளையும், கஷ்டங்களையும் போக்கினதாக படிக்கலாம். இவைகள் உண்மைதான். அதற்கு ஒரு மறு பக்கமும் உண்டு. என்ன! அவர்களுடைய அநேக அத்யந்த பக்தர்கள் பலர் சிரமப்படுவதையும் பார்க்கின்றோம் அல்லவா! தத்துவம் இல்லாத காம்யமான பக்தியில் மோகிப்போமானால் வீண்தான். ஆகவே தத்துவம் தெரிந்து கொண்டு பக்தி செய்ய வேண்டும். மிகப் பெரிய அசத்துக் கூட்டத்தை கூட்டி பெருமைப்படுவதைக் காட்டிலும், ஒரு பத்து பேரை சத்தாக மாற்றுவதுதான் உயர்ந்ததாக எனக்குப் படுகின்றது.

நான் எத்தனையோ கார்யங்கள் (மஹோத்ஸவங்கள், ஸ்தாபனங்கள்) நடத்தி வருகின்றேன். இவைகளினால் நான் சந்தோஷப்படுவதைக் காட்டிலும், ஒருவரை ஹரி நாமம் சொல்ல வைக்க முடிந்தால் அதைத்தான் பெரிய சாதனையாக நினைக்கின்றேன். உலகத்தில் யார் எனக்கு எப்பேர்ப்பட்ட கெடுதல் செய்தாலும் சரி, தூற்றினாலும் சரி எல்லோருக்கும் என்னால் முடிந்த வகைகளில் எல்லாம் உபகாரம் செய்வது என்பதையே சங்கல்பமாகக் கொண்டுள்ளேன். நீங்களும் அப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்.

இந்த ஸத் ஸங்கத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் தார்மீகமான வாழ்க்கை வாழ வேண்டும், நித்யம் நாம ஜபமும் நாம கீர்த்தனமும் செய்யவேண்டும். பரோபகாரிகளாகவும் தியாகிகளாகவும் இருக்க வேண்டும். ஒழுக்கத்துடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும். இப்படியெல்லாம் நாம் இருந்து விட்டாலே பகவான் நமக்கு எல்லா சகாயமும் செய்து விடுவான். நீங்கள் பெரிய பெரிய கார்யங்களை செய்ய வேண்டும் என்று நான் ஆசைப்படவில்லை. கார்யம் சிறியதாகவே இருக்கட்டும். சிரத்தையுடனும் அன்புடனும் செய்யுங்கள் என்று தான் கூறுகின்றேன்.

சுவர்க்கம் என்பது வேறு எங்கும் இல்லை. நாம் வாழத் தெரிந்து, வாழ்க்கையை வாழ்ந்தால் இது தான் சுவர்க்கம், இல்லாவிட்டால் இதுவே தான் நரகமும் கூட. மரணத்திற்குப் பின் வாழ்க்கை இல்லை என்றால் எப்படியாவது வாழ்ந்து விட்டு போகலாம். கண்டிப்பாக மரணத்திற்குப்பின் வாழ்க்கை உண்டு. நாம் பகவானுக்குச் சம்மதமாக வாழ்ந்தால் ஒழிய பகவானுடைய சரணத்தை அடைய முடியாது.

**இதுபடி எல்லாம் நீங்கள் வாழ்வதற்கு உறுதி எடுத்துக் கொண்டால், அதுவே எனக்கு நீங்கள் கொண்டாடும் ஜெயந்தி மஹோத்ஸவமாகும்.**

---

*உலகத்தில் நாஸ்திகம் இந்த அளவிற்குப் பரவியிருப்பதற்குக் காரணம் அவர்களின் ஓயாமல் செய்யும் பிரச்சாரம் தான். எதுவும் பிரச்சாரத்தினால்தான் வளரும், உண்மைகள் புரியும். ஆகவே, பகவான், கீதையில் சொன்னதைப் போல் நாமும் நம்மால் முடிந்த அளவுக்கெல்லாம் தர்மப் பிரச்சாரமும், பக்திப் பிரச்சாரமும் செய்ய வேண்டும்.*

**-குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்**

# செய்திகள்

## செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 2 வரை

### நவராத்ரி உத்ஸவம்

ஸ்ரீ மல்லிஹார்ஜுன பாகவதர் அவர்கள் குழுவினரால் ஸம்ப்ரதாய அஷ்டபதி பஜனை செய்யப்பட்டது.

ஸ்ரீ ஜானகிராம் பாகவதர் அவர்களால் 'ஸ்ரீ பத்ராசல ராமதாஸர்' சரித்திரமும், 'பத்மாவதி கல்யாணம்' ஸங்கீத உபன்யாஸமும் நிகழ்த்தப்பட்டன.

❀ ❀ ❀

## அக்டோபர் 3

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் பிரதிஷ்டை செய்யப்பட்ட அவதார உத்ஸவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

காலையில் ஸ்ரீ பெருமாளுக்கு ச்ரவண தீபம் ஏற்றப் பட்டது. விசேஷ திருமஞ்சனமும் அலங்காரமும் நடத்தப்பட்டன.

மாலையில் ஸ்ரீ ஸீதா ஸுப்ரமண்யம் அவர்களால் சங்கீதக் கச்சேரி நிகழ்த்தப்பட்டது.

❀ ❀ ❀

**மங்களானீ பவந்து**



ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள் அவதார தினத்தன்று (அக்டோபர் 3), பெருமாளுக்கு 'ஸஹஸ்ர தாரை'யால் திருமஞ்சனம் செய்யப்படும் நிகழ்ச்சி.

# மதுரமுரளி

Registered as Newspaper in India

R. Dis. 2032/95 Regd. No. TN/MS/(S)1698

Single Copy Rs. 5/- Annual Subs. Rs. 60/-

வேணு : 1 நவம்பர் 1995 கானம் : 4


மதுரமுரளி மாத இதழிற்கு சந்தாதாரர்கள் வரவேற்கப் படுகிறார்கள். வருஷச் சந்தா ரூ.60/- தனிப் பிரதி ரூ.5/-

டிமாண்டு டிராப்டை 'குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்' என்ற பெயரில் வாங்கி, உறை மீது

மதுரமுரளி
V. சங்கரன்,
5/3, MIG Flats,
பி.டி. ராஜன் ரோடு,
கே.கே. நகர், சென்னை 600 078

என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

மணியார்டர் மூலமும் மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பலாம்.

மிஷன் சார்பில் "சாந்தீபனி குரு குலம்" என்ற டிரஸ்டின் கீழ் ஸாம வேத பாடசாலையும், யஜுர் வேத பாடசாலையும் சென்னை வளசரவாக்கத்தில் நடைபெறுகின்றன. பாடசாலைக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பும் நன்கொடை களுக்கு வருமான வரி விலக்கு உண்டு. பாடசாலைக்கு வித்யார்த்திகளையும், 'மதுரமுரளி' இதழுக்கு சந்தாதாரர்களைச் சேர்த்தும், விளம்பரங்களை அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Madras 600 095 and printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Madras 600 014. Editor : S. Sridhar